**சிறப்பு சார்பு நீதிமன்றம், (மோட்டார் வாகன விபத்து இழப்பீடு தீர்ப்பாயம்)**
**திருப்பத்தூர், திருப்பத்தூர் மாவட்டம்**
**MCOP . No.157/2025**

**நாள் : 09.04.2026**

**எ.ம.சா.** 1 (மனுதாரர் தரப்பில்) வது நபரின் வாக்குமூலம் (1959)–ம் ஆண்டின் 54 வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.சரவணபவன் | மாவட்டம் | : | சென்னை |
| தந்தை / கணவர் பெயர் | : | திரு.சந்தானம் | வயது | : | 48 |
| ஊர் | : | சென்னை | தொழில் | : | உதவி துணைத்தலைவர் |
| வட்டம் | : | சென்னை | தேசியம் | : | இந்தியன் |

**முதல் விசாரணை:**

நான் 2ஆம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் உதவி துணைத்தலைவராக பணிபுரிந்து வருகிறேன். மேற்படி 2ஆம் எதிர்மனுதாரர் நிறுவனமானது தற்போது இண்டஸ்இண்ட் ஜெனரல் இன்சூரன்ஸ் கம்பெனி என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. நான் 2ஆம் எதிர்மனுதாரர் நிறுவனத்தின் முக்கிய பொறுப்பில் உள்ள நிலையில் வழக்கு சம்பந்தப்பட்ட விவரங்கள் எனக்கு பரிச்சையம். 2ஆம் எதிர்மனுதாரர் சார்பாக இந்த வழக்கிற்கான நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் என்னால் சொல்லப்பட்டவை மற்றும் உண்மையானவை. அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான்.

1. 1ஆம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான பல்சர் வாகனத்தின் காப்பீட்டு ஒப்பந்த நகல் எ.ம.சா.ஆ.1

2. 1ஆம் எதிர்மனுதாரர் வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை நகல் எ.ம.சா.ஆ.2

**மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:**

வழக்கு விவரங்கள் ஆவணங்கள் அடிப்படையில்தான் தெரியும் என்றால் சரிதான். விபத்து சம்பந்தப்பட்ட TN 24 AM 3208 என்ற பல்சர் வாகனமானது எங்களது நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி வாகனத்தை ஓட்டிச் சென்ற ஓட்டுநர் எதிராக திம்மாம்பேட்டை காவல் நிலைய குற்ற எண்.41/2019ன் கீழ் குற்ற வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி ஓட்டுநருக்கு எதிராக வாணியம்பாடி நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். விபத்தானது எங்களது நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்ட பல்சர் வாகன ஓட்டுநரின் அஜாக்கிரதையால் ஏற்பட்டதால் எங்களது நிறுவனமானது மனுதாரர்களுக்கு நஷ்டஈடு கொடுக்க கடமைப்பட்டது என்றால் சரியல்ல. மனுதாரர்களுக்கு நஷ்டஈடு கொடுப்பதிலிருந்து தப்பிக்கவேண்டி தவறாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. விபத்தினால் ஏற்பட்ட இழப்பிற்கு எங்களது நிறுவனம் நஷ்டஈடு கொடுக்க கடமைப்பட்டது என்றால் சரியல்ல.

ஒம்/. J. நாகலட்சுமி @ விஜயராணி(FAC),
சிறப்பு சார்பு நீதிபதி (MACT),
திருப்பத்தூர்.